லம்புரிச்சங்குபோன்ற கழுத்தும் மகாலட்சுமி வாசமாயிருக்கி ன்றமார்பும், சகலசராசரங்களையும் அடக்கிவைத்திருக்கின்ற திரு வயிறும் கங்காவர்த்தனஞ் சுழித்திருக்கின்ற சுழல்போன்ற நாபித் தாமரையும்-வாழைத்தண்டை யொத்ததொடைகளும்-மன்மதபா ணம்போன்ற ஆசனமும் செங்கரும்புபோன்ற கணைக்கால்களும் சந்திரரேகை வச்சிரரேகை பதுமரேகை அங்குசரேகை சவுசிகரே கைகளுடன் சிவந்திருக்கப்பட்ட பாததாமரைகளும் நவரத்தினக சிதமாய்கோடிசூரியரொளிபோற் பிரகாசிக்கின்ற கிரீடமும்மகர குண்டலங்களும் வனமாலைமுதலிய சுகந்தபரிமள புஷ்பமாலைக ளும் கவுஸ்துவாபரணமுதலிய நானாவிசித்திராபரணங்களும் வி ளங்கவீதமும் பீதாம்பரமும் பிரகாசிக்கும்படி மகாவைபவத் துடன் ஒருகையைச் சிரசின்கீழ் வைத்துக்கொண்டு மற்றொருகை யைத்திருமேனிமேல்நீட்டிக்கொண்டுஆயிரம்பணாமுடிகளையுடை யஆதிசேஷன்பேரில் யோகநித்திரை செய்துக்கொண்டிருந்தார்.

அப்படிவிளங்குகின்ற ஸ்ரீரங்கநாதருடையதிருவழகைத்தோ த்திரஞ்செய்ய சுவாமிதாசனை ரக்ஷித்தருளவேண்டும் ரக்ஷித்தருள வேண்டுமென்று நமஸ்காரஞ்செய்துஸ்ரீரங்கநாதாயநமஹா ரங்க நாதாயநமஹாவென்று பலவாறாக தவுத்தியஞ் செய்தான் கேட் டீரோ நாரதரேயென்று பரமசிவன்திருவுளம்பற்றி யருளினார் அ துகேட்டு நாரதமுனிவரும் ஆச்சரியப்பட்டு மகாசந்தோஷத்தை யடைந்திருந்தார்

ஸ்ரீரங்கநாதாயநமஹா,

மூன்றாவது-அத்தியாயம்முற்றிற்று.

☞ இரண்டாமத்தியாயத்தில் கூர்மாவதாரத்துதிகவியில்(கலைம தியை மத்தாக்கி)என்பதனை கலைமதியைத்தாணாக்கி என்றுகூட்டிக் கொள்க.

உ

ஸ்ரீரங்கநாதாயநமஹா

# நான்காம் அத்தியாயம்

## துதிகவி

விருத்தம்.

சுரர்முதலோ ரோத்தெடுப்பக் கற்றூணினரசிங்கச் சொரூபமாகி, இரணியன்வல் லுயிர்குடித்துஹரிநமோவென்றுள் ளிரங்கிநிற்கும் ஒருமதலைபிரகலாதனைனையளித்தருளுவா யுலகமுய்யத், திருவரங்க த்தரவணைமேற்றிருக்கண்வளர்த்தெமையருளுந்தேவேபோற்றி ✳

